## 130. ஏ உள்ளத்திலே வைச்சிகிட்ட

### பல்லவி

ஏ உள்ளத்திலே வைச்சிகிட்டே
இயேசு ராசாதி ராசா உம்ம

### அனுபல்லவி

நீரே என் மனவாளரே
நீரே என் துணையாளரே

### சரணங்கள்

1. உலக அன்பெல்லா மாயைதானே
உங்க அன்பு உண்மை தானே
மனித உறவு மறந்திடுமே
உங்க உறவு நிலைத்திடுமே
- என் உள்ளத்திலே

2. அழகும் அறிவும் உள்ளவரை - இந்த
உலகம் திரும்பி பார்க்கும்
அறிவும் அழகும் இல்லையென்றாலும்
என்னை நோக்கி பார்த்தவரே
- என் உள்ளத்திலே

3. செல்வ செழிப்பை உலகம் தேடும்
இருந்த மட்டும் நாடி வரும்
இருந்தாலும் இல்லையென்றாலும்
என்னை தேடி வந்தவரே
- என் உள்ளத்திலே